**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.2-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.808/2021

வா.சா.2 சாத்தப்பன் த/பெ சுப்பிரமணியம்

<u>பிரதிவாதி தரப்புகுறுக்குவிசாரணை :-</u>

1. நான் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். வா.சா.1 என் மனைவியை குறுக்குவிசாரணை செய்து முடிக்கப்பட்டது என்றால் சரிதான். என்னையும் இந்த வழக்கில் குறுக்குவிசாரணை மேற்கொள்ளப்பட்டது என்றால் சரிதான். வாதி குறுக்கு விசாரணை மற்றும் என்னையும் குறுக்கு விசாரணை செய்து முடித்தபிறகுதான் தற்போது வா.சா.9ஆவணம் எழுத்தப்பட்டத்தை தாக்கல் செய்கிறேன் என்றால் சரிதான்.

2. என் மனைவிக்கு இந்த கெமிக்கல் நிறுவத்தை தவிர வேறு எந்த தொழிலும் செய்யவில்லை. என் மனைவி தொடர்ச்சியாக வெளிநாடு செல்வது உண்டா என்றால் இல்லை. நிறுவனத்திற்கு அடிக்கடி என் மனைவி வந்து செல்வார் என்றால் எப்போதாவது தான் வந்து செல்வார். என் மனைவி இனி வருங்காலத்தில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வாய்ப்புகள் உள்ளது என்றால் தேவையானல் வருவார்.

3. என் மனைவி நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார் என்றால் சரிதான். என்ன காரணத்திற்காக வா.சா.9 ஏற்படுத்தப்பட்டது என்றால் என் மனைவி அலுவலக பணி மேற்கொள்கிறார் நான் களப்பணி மேற்கொள்வதால் வா.சா.9 என் பெயருக்கு எழுதிக்கொடுக்கப்பட்டது. மேற்கண்ட விபரங்களை வா.சா.9 சங்கதிகளை செல்லவில்லை என்றால் சரிதான். மேலும் மேற்படி சங்கதிகளை என்னுடைய கூடுதல் பிரமாணவாக்குமூலத்தில் செல்லவில்லை என்றால் சரிதான்.

4. என்னுடைய கூடுதல் பிரமாணவாக்குமூலத்தில் என் மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று பொய்யாக குறிப்பிட்டுள்னேன் என்றால்

சரியல்ல. என் மனைவி உடல் நிலை சரியில்லாத காரணத்திற்கு போதிய மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

5. என் மனைவி அவருடைய குறுக்குவிசாரணையில் வருமானவரி கணக்குகள் தாக்கல் செய்ய இயலும் என்று கூறிவிட்டு தற்போது அந்த வருமான வரி கணக்குகள் ஆவணங்களுக்காக தான் வா.சா.9 ஆவணம் என் பெயரில் ஏற்படுத்தி பொய்யாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்தத வழக்கின் உண்மை தன்மைகளை மறைப்பதற்காக தான் வா.சா.9 ஆவணம் தாக்கல் செய்யப்படுகிறது என்றால் சரியல்ல.

6. இந்த வழக்கில் சொல்லியுள்ள கணக்குகளை போதிய ஆவணங்கள் மூலம் நிருபிக்கவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை :– இல்லை